CC.No.53/2023 (JM.No.II, DHARMAPURI)

12.11.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW– 1 : திரு. மாரியப்பன் , த/பெ.குழந்தை**

**முதல் விசாரணை**

நான் சிவாடியில் உள்ள ஊத்துப்பள்ளத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி தெரியாது. இந்த விபத்தில் இறந்து போன மணிகண்டன் என்னுடைய மகன் ஆவார். மோகன் (எ) முனிவேல் என் மகனின் நண்பர் ஆவார். புகார் மனுவில் உள்ள கைரேகை என்னுடையது. கடந்த 30.10.2022 ம் வருடம் மதியம் சுமார் 01.30 மணிக்கு மோகன் (எ) முனிவேல் என்பவரின் இருச்சக்கர வாகனத்தில் என் மகன் மணிகண்டம் சேலத்திலிருந்து கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை அருகே குடுபட்டி மேம்பாலம் அருகே உள்ள சக்திவேல் பள்ளிக்கு எதிரே மோகன் (எ) முனிவேல் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டும், என்னுடைய மகன் பின்னாடி உட்கார்ந்து கொண்டும் இருசக்கர வாகனத்தில் சென்ற போது அதே திசையில் என் மகன் சென்ற இருசக்கர வாகனத்தின் பின்னால் வந்த Honda காரின் ஓட்டுநர் நிலை தடுமாறி என் மகன் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் முனிவேலுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. என்னுடைய மகன் மணிகண்டனுக்கும் தலையில் பலத்த காயமும், இரண்டு கால்களிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன. இந்த தகவலை சின்னசாமியின் மகன் ராமன் என்பவர் நேரில் வந்து தகவல் சொன்னார். அப்போது காயம்பட்ட இருவரையும் L & T ஆம்புலென்ஸ் மூலமாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போகும் வழியிலேயே என் மகன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். நான் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது பிரேத பரிசோதனை செய்வதற்காக உடலை வைத்திருந்தார்கள். என் மகனின் நண்பன் மோகன் (எ) முனிவேல் என்பவருக்கு மேல் சிகிச்சைக்காக சேலம் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இது சம்பந்தமாக அதியமான்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த கைரேகையுடன் கூடிய புகார் மனு **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

1. இந்த வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த விவரத்தை கேள்விபட்டவுடனே காவல் நிலையம் சென்று புகார் அளித்தேனா என்றால் இல்லை. இந்த விபத்தில் சம்பந்தபட்ட வாகனங்களை நான் சென்று பார்க்கவில்லை. புகார் மனுவை நான் கைபட எழுதவில்லை. புகார் மனுவை காவல் நிலையத்தில் வைத்து கைரேகை வைத்தேன். புகார் மனுவை யார் எழுதி கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் இருந்த போலிஸார்கள் எழுதி கொடுத்தார்கள். நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். நான் சொன்ன தகவலின் பேரில் தான் புகார் மனுவை எழுதினார்கள் என்றால் சரிதான். என்னுடன் வந்தவர்கள் விபத்து குறித்து போலிஸாரிடம் எந்த தகவலும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் காவல் நிலையத்திற்கு புகார்

அளித்த பெரியசாமி, ராஜாமணி, ராமன், குப்பன், சேட்டு, என் மகன் சாமிநாதன், என் மனைவி மாதேஷ் ஆகியோர் சென்றோம். என்னுடன் வந்தவர்கள் புகார் மனு எழுதவில்லை என்றால் சரிதான். என்னுடன் வந்தவர்களில் படிக்க தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். புகார் மனுவில் யார் எழுதினார்கள் என்ற விவரம் இல்லை என்றால் சரியல்ல. பெயர் இருக்கிறது.

2. புகாரை நான் படித்து பார்த்து ரேகை வைத்தேனா என்றால் படித்து காண்பித்தார்கள், பின்பு ரேகை வைத்தேன். விபத்தில் சம்பந்தபட்ட வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று மாலை காவல் நிலையத்திற்கு சென்றோம். நேரம் குறிப்பிட்டு தெரியவில்லை. விபத்தில் அடிப்பட்டதாக சொல்லப்படும் நபர்கள் எங்கிருந்து எங்கு சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. விபத்து நடந்த பிறகு விபத்து நடந்த பகுதியை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தை பார்த்துவிட்டுதான் மருத்துவமனைக்கு சென்றேன். விபத்து நடந்த இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. விபத்து நடந்த பகுதியிலிருந்து 4-5 கி.மீ தொலைவில் என்னுடைய வீடு உள்ளது. வாகனத்தில் வந்தால் 5 நிமிடங்களில் சம்பவயிடத்திற்கு வந்துவிடலாம் என்றால் சரியல்ல. அரை மணி நேரம் ஆகும். எங்கள் ஊரிலிருந்து சம்பவயிடத்திற்கு அடைய சரியான சாலை வசதி உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்ததாக தொலைபேசியின் மூலம் யாரும் தகவல் கொடுக்கவில்லை, நேரில் வந்து தான் தகவல் சொன்னார்கள். சம்பவம் நடந்த இடத்திலிருந்து 10 நிமிடத்திற்குள் என்னுடைய வீட்டிற்கு வாகனத்தில் வந்துவிடலாம் என்றால் சரியல்ல. விபத்து நடந்த தகவல் சொன்ன நபர் என்னுடைய உறவினர் இல்லை, என்னுடைய ஊர்காரர் ஆவார். எத்தனை மணிக்கு வந்து தகவல் சொன்னார் என்று எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனை செய்த போது போலிஸார் என்னை விசாரித்தனர். அடிப்பட்ட நபர்கள் எந்த வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர் என்ற விவரம் கேள்விப்பட்டுதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகார் மனுவை எனக்கு படித்து காட்டியதற்கான என்னுடைய ஊர்காரர்கள் கையொப்பம் செய்தனர். புகார் மனுவில் மேற்படி கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

3. இந்த விபத்திற்கான காரணம் என்னுடைய மகன் சென்ற இருசக்கர வாகனம் தான் என்றாலும், எதிரி காரணம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் விபத்து நடந்த இடத்தை சென்று பார்த்த போது விபத்தில் ஈடுபட்ட வாகனங்கள் அங்கு இல்லை. விபத்திற்கு பின்னிட்டு விபத்து எப்படி நடந்தது என்ற விவரம் நான் பின்னிட்டு முனிவேல் என்பவரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். நான் புகாரில் சொன்னவாறு விபத்து நடக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. விபத்து ஞாயிற்றுகிழமை அன்று நடந்தது.

ஒப்பம்/-இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.

CC.No.53/2023 (JM.No.II, DHARMAPURI)

12.11.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW– 2 : திரு. மோகன் (எ) முனிவேல் , த/பெ.மனோகரன்**

**முதல் விசாரணை**

நான் சிவாடியில் உள்ள ஊத்துப்பள்ளத்தில் குடியிருந்து கார்பெண்டர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி தெரியும். இந்த விபத்தில் இறந்து போன மணிகண்டனை எனக்கு தெரியும். அ.சா.1 யையும் எனக்கு தெரியும். கடந்த 30.10.2022 அன்று மதியம் சுமார் 01.30 மணிக்கு சேலம் மெயின் ரோட்டிலிருந்து கிருஷ்ணகிரி செல்வதற்காக சக்திவேல் பள்ளிக்கு எதிரே என்னுடைய வாகனமான TN 29 BM 8929 என்ற வாகனத்தில் நான் ஓட்டிக்கொண்டும், மணிகண்டன் பின்னாடி உட்கார்ந்து கொண்டு ஓரமாக சென்ற போது எங்களுக்கு பின்னாடி வந்த TN 34 D 1898 பதிவெண் கொண்ட HONDA காரின் ஓட்டுநர், நாங்கள் ஓரமாக சென்ற போதும், எங்களுக்கு பின்னாடி வந்த காரின் ஓட்டுநர் அத்துமீறி எங்கள் வண்டியின் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் கீழே விழுந்ததில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மயக்கநிலையில் சென்றுவிட்டேன். மணிகண்டனுக்கும் கை, கால் காயம் ஏற்பட்டது, தலையின் பின்புறத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. L & T ஆம்புலென்ஸ் மூலமாக என்னையும், மணிகண்டனையும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மணிகண்டன் என்பவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனக்கு மேல் சிகிச்சைக்காக சேலம் தனியார் மருத்துவமனையான நீயூரோ பவுண்டேஷன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இது சம்பந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்களா என்று ஞாபகம் இல்லை. மூன்று மாதங்களாக சுயநினைவின்றி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். மீண்டும் கெங்கலாபுரத்தில் உள்ள பாலாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அப்போது போலிஸார் வந்து விசாரித்தார்களா என்று தற்சமயம் எனக்கு ஞாபகம் இல்லை.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

1. இந்த வழக்கில் என்ன புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் நீதிமன்றத்தில் தற்போது காட்டப்படும் 2– புகைப்படங்களில் உள்ள இருசக்கர வாகனம் தான் விபத்து நடந்த போது ஓட்டி சென்ற வாகனம் என்றால் சரிதான். அந்த இரண்டு புகைப்படங்கள் எ.த.சா.ஆ.1 (Subject to Admissibility) ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிகொண்டு சென்ற போது இருசக்கர வாகனத்தில் பதிவெண் பட்டை (Number Plate) இல்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடனே நான் மயக்கம் ஆனதால் எந்த வாகனம் வந்து மோதியது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, பின்னாடி திரும்பி பார்க்கும் போது கார் என்று தெரிந்தது. வாகனம் வேகமாக செல்லும் போது வாகனத்தின் பதிவெண் தெரியாது என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் எங்கள் மீது மோதிய வாகனத்தின் பதிவெண் கூறியுள்ள நிலையில், சம்பவத்தின் போது திரும்பி பார்த்த போது அந்த பதிவெண்

எனக்கு தெரிந்ததா என்றால் இல்லை. விபத்து நடந்த பிறகு 6 மாதங்களாக சுயநினைவின்றி இருந்தேன் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் சம்பந்தபட்ட ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, நான் பார்த்தேன். விபத்து நடந்த பிறகு தற்போது தான் முதல் முறையாக நீதிமன்றத்திற்கு வருகிறேன் என்றால் இதற்கு முன்பு இதே நீதிமன்றத்தில் இதே வழக்கிற்காக வந்துள்ளேன். இதற்கு முன்பு சாட்சியளித்துள்ளேனா என்றால் இல்லை. நான் சாட்சி அளிக்காத நிலையில் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட ஆவணங்களை நான் எப்படி பார்த்தேன் என்றால் சாட்சி அமைதியாக இருந்தார். என்னுடைய இருசக்கர வாகனத்தின் எந்த பாகத்தில் காரின் எந்த பாகம் வந்து மோதியது என்ற விவரம் தெரியாது. விபத்து நடந்த சாலையில் இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் என தனிதனியாக செல்வதற்கு lane உள்ளது என்றால் சரிதான். நான்கு சக்கர வாகனங்கள் செல்லும் lane ல் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் நானும், மணிகண்டனும் Helmet அணிந்திருக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்வதற்காக உரிமம் இல்லை என்றால் சரிதான். எங்கள் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனம் விபத்திற்கு பின் விபத்து நடந்த இடத்திலேயே நின்றுவிட்டது. பொதுவாக ஒரு வாகனம் வேகமாக வந்து, இன்னொரு வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினால், விபத்து ஏற்படுத்திய வாகனம் கவிழ்ந்து, உருண்டு விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கும் பாதிப்பு ஏற்படும் என்றால் சாட்சி அமைதியாக இருந்தார்.

3. விபத்து ஏற்படுத்திய காருக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணம் செய்தனர் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரியை தற்போது தான் முதல் முறையாக பார்க்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் என்று சொல்லியிருந்தால், அது தவறு என்றால் சரிதான். இருசக்கர வாகன lane ல் இரந்து நான்கு சக்கர வாகனம் lane க்கு செல்லும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் வருவதை பார்க்காமல் சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, நான் ஓரமாக தான் வந்தேன். நான் ஏற்கெனவே நான்கு சக்கர வாகனங்கள் செல்லும் Lane ல் தான் விபத்து நடந்தது என்று கூறியுள்ள நிலையில், நான் ஓரமாக செல்லும் போது தான் விபத்து ஏற்பட்டது என்று மாறுபட்டு கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால், விபத்து இழப்பீடு பெற பிரச்சினை வரும் என்பதால் எதிரியின் மீது பொய்யான புகார் அளிக்கபட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயத்தில் காரை யார் ஓட்டி வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிஸார் வந்து விசாரித்தார்களா என்றால் யாரும் வந்து விசாரிக்கவில்லை. மணிகண்டனுக்கு எங்கு அடிப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பந்தபட்ட வாகனத்தின் பதிவெண்ணை நான் எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் சாட்சி அமைதியாக உள்ளார்.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.

CC.No.53/2023 (JM.No.II, DHARMAPURI)

12.11.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW– 3 : திரு.ராமன், த/பெ. சின்னசாமி**

**முதல் விசாரணை**

நான் சிவாடியில் உள்ள ஊத்துப்பள்ளத்தில் குடியிருந்து டீக்கடை வைத்து வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இந்த விபத்தில் இறந்து போன மணிகண்டன், அ.சா.1 மற்றும் அ.சா.2 யை எனக்கு தெரியும். கடந்த 30.10.2022 ம் வருடம் மதியம் சுமார் 01.30 மணிக்கு மேல் நான் நல்லம்பள்ளி செல்வதற்காக சர்வீஸ் ரோட்டில் என்னுடைய Scootyல் வந்து கொண்டிருந்த போது இந்த விபத்திற்குண்டான இருவரும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சேலம் இருந்து கிருஷ்ணகிரி நோக்கி செல்லும் ரோட்டில் Hero Honda Splendor Plus வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அவருடைய Hondai காரில் அதிவேகமாக அவருடைய கார் வந்து கொண்டிருந்தது. என்னடா இவ்வளவு வேகமாக வந்து கொண்டிருக்கிறது என்று சென்று பார்த்த போது அந்த காருக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது கண் இமைக்கும் நேரத்திற்குள் மோதி என்னடா இவ்வளவு வேகமாக வண்டி செல்கிறது என்று பார்த்த போது அந்த இருசக்கர வாகனத்தில் இருந்த இருவரும் தூக்கி வீசப்பட்டார்கள். மணிகண்டன் சர்விஸ் ரோட்டில் தூக்கி வீசப்பட்டார். மோகன் கார் பக்கத்தில் கிடந்தார். சர்விஸ் ரோட்டிற்கும், மெயின் ரோட்டிற்கும் இடைபட்ட இடத்தில் உள்ள புல் பதிக்கப்பட்ட சென்டர் மீடியனின் மீது மோதி கார் நின்றுவிட்டது. மணிகண்டனுக்கு தலையின் பின்பக்கத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. மோகனுக்கு காலில் அடிப்பட்டு மயக்க நிலையில் இருந்தார். நான் கத்தி கூச்சலிட்டு அக்கம், பக்கம் இருந்தவர்கள் ஓடிவந்து தண்ணீர் தெளித்தும், மணிகண்டனுக்கு தண்ணீர் கொடுத்தேன், தண்ணிர் வெளியே வந்த இரண்டு காதுகளிலும் இரத்தம் வெளியே வந்து கொண்டிருந்தது, மோகனுக்கு மற்றொரு நபர் தண்ணீர் கொடுத்தார், அப்போது அவர் சுய நினைவின்றி சம்பவயிடத்தில் இருந்தார். அங்கிருந்த நபர்கள் யாரோ L&T நிறுவனத்திற்கு தகவல்தெரிவித்து ஆம்புலென்ஸ் வந்தது. காயம்பட்ட இருவருமே ஒரே ஆம்புலென்ஸ மூலமாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நான் தான் சென்று அ.சா.1 ற்கு தகவல் சொன்னேன். அன்றைய தினமே மணிகண்டன் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். அடுத்த நாள் போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் 6– ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் முதல் விசாரணையில் கூறியதை தான் போலிஸார் விசாரணையிலும் கூறினேன் என்றாலும், அதை தான் அப்படியே அவர்கள் பதிவு செய்தனர் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியதை அப்படியே தான் போலிஸாரிடமும் கூறினேன். நான் என்னுடைய போலிஸார் விசாரணையில் மளிகை கடை வைத்துள்ளதாக கூறிவிட்டு, தற்போது முதல் விசாரணையில் டீக்கடை வைத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது டீக்கடை வைத்திருந்தேன். மளிகை கடை வைத்து நடத்தவில்லை. என்னுடைய 161 வாக்குமூலத்தில் மளிகை கடைக்கான பொருட்களை வாங்க

செல்லும் போது தான் சம்பவத்தை பார்த்ததாக கூறியிருந்தால், அது தவறு என்றால் சரிதான். என்னுடைய 161 வாக்குமூலத்தில் நான் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்திற்கு முன்பாக தான் விபத்தில் சம்பந்தபட்ட இருசக்கர வாகனமும் சென்றிருந்தது என்று கூறியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் நான் சர்வீஸ் ரோட்டில் போய் கொண்டிருந்ததாகவும், இருசக்கர வாகனம் வேறு சாலையில் சென்றுள்ளதாக கூறியுள்ளேன் என்றால், ஒரே நேர்க்கோட்டில் தான் சென்று கொண்டிருந்தது. எ.த.சா.ஆ.1 ல் காட்டப்படும் வாகனம் தான் எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த வாகனமா என்றால் விநாயகர் படம் போடப்பட்ட வாகனம் சென்றது. எ.த.சா.ஆ.1 ல் உள்ள மற்றொரு வண்டியின் புகைபடம் இல்லை, சாட்சி மீண்டும் எனக்கு குறிப்பிட்டு ஞாபகம் இல்லை என்று கூறுகிறார்.

2. எ.த.சா.1 ல் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள நிலையில் தான் நான் பார்க்கும் போது அந்த வாகனம் இருந்தது என்றால் சரிதான். நான் பார்த்த சமயத்தில் வண்டியில் Number Plate இல்லை என்றால் அதைப்பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. விபத்தில் ஈடுபட்ட இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரிதான். ஒரே நேர்க்கோட்டில் என்னுடைய வாகனமும், விபத்தில் ஈடுபட்ட இருசக்கர வாகனமும் வந்தததாக கூறியுள்ள நிலையில், முன்னால் சென்ற இருசக்கர வாகனத்திற்கும், என்னுடைய வாகனத்திற்கும் இடையே சுமார் 300 மீ இடைவெளி இருந்தது. இருசக்கர வாகனத்தின் மீது காரின் எந்த பாகம் மோதியது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தில் ஈடுப்பட்ட காரின் பதிவெண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் ஈடுப்பட்ட காரில் எத்தனை நபர்கள் பயணம் செய்தனர் என்று எனக்கு தெரியாது. 300 மீ இடைவெளி இருந்ததால் முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தை யார் ஓட்டிக்கொண்டும், யார் உட்கார்ந்து கொண்டும் வந்தனர் என்று தெரியாது என்றால் சரிதான். 161 வாக்குமூலத்தில் மோகன் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டும், மணிகண்டன் பின்னால் உட்கார்ந்து கொண்டும் வந்தனர் என்று நான் கூறியிருந்தேன் என்றால், அது தவறு என்றால் சரிதான். போலிஸாரிடமும் யார் ஓட்டினார்கள் என்று தெரியாது என்று தான் கூறினேன்.

3. 161 வாக்குமூலத்தில் L & T ஆம்புலென்ஸ்க்கு நான் போன் செய்ததாக கூறியிருந்தால், அது தவறு என்றால் சரிதான். ஒரே நேர்க்கோட்டில் என்னுடைய இருச்சக்கர வாகனமும், விபத்தில் ஈடுபட்ட இருச்சக்கர வாகனமும் சென்று கொண்டிருந்த நிலையில், என்னுடைய வாகனத்தை கடந்து தான் விபத்தில் ஈடுபட்ட கார் சென்றதா என்றால் இல்லை. நான் சர்வீஸ் ரோட்டில் சென்று கொண்டிருந்தேன். மற்றொரு இருசக்கர வாகனம் மேல் ரோட்டில் சென்று கொண்டிருந்தது. நானும் வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன், மேற்படி இருசக்கர வாகனமும் வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தது. சர்வீஸ் ரோடு பள்ளமான பகுதி என்றாலும், மெயின்ரோடு உயரமான பகுதி என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக காவல் துறையினரிடமும் எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அக்கம், பக்கம் இருந்தவர்கள் தகவல் சொன்னார்களா என்றால் தெரியாது. விபத்தில் அடிப்பட்ட நபர்களுக்கு நான் உதவி செய்ததாக கூறியுள்ளேன் என்றாலும், என்னுடைய முதல் விசாரணையில் ஒரு நபருக்கு மட்டும் தான் உதவி செய்தேன் என்று கூறியுள்ளேன். விபத்து எத்தனை மணிக்கு நடந்தது என்று குறிப்பிட்டு எனக்கு தெரியாது என்றால் சரிதான், சுமார் 01.15 to 01.40 க்குள் நடந்தது. விபத்து இருசக்கர வாகனத்தின் lane –ல் தான் நடந்தது. விபத்து நடந்து எவ்வளவு நேரம் கழித்து ஆம்புலென்ஸ் வந்தது என்று

தெரியாது. விபத்தில் ஈடுபட்ட வாகனங்களை விபத்து நடந்த பிறகு நான் எங்கேயும் பார்க்கவில்லை.

4. இருசக்கர வாகனத்தில் சென்ற நபர்கள் ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரிதான், நானும் அணியவில்லை. சாட்சி மீண்டும் விபத்தில் இறந்த மணிகண்டன் கருப்பு நிற ஹெல்மெட் அணிந்திருந்தார் என்று கூறினார். மணிகண்டன் குடும்பத்தாரிடம் விபத்து குறித்து பகல் 01.55 மணிக்கு தகவல் சொன்னேன். ஆம்புலென்ஸில் அடிப்பட்டவர்களை ஏற்றிவிட்டு, பிறகு சென்று தகவல் அளித்தேன். விபத்திற்கு பின்னிட்டு அடிப்பட்ட நபர்களுக்கு என்ன நடந்தது என்று நேரடியாக தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் 300 மீ இடைவெளியில் வந்து கொண்டிருந்த நிலையில் விபத்து எவ்வாறு நடந்தது என்று குறிப்பாக சொல்லமுடியாது என்றால் சரியல்ல, ஒரே நேர்க்கோட்டில் வந்ததால் எனக்கு தெரிந்தது. நான் பள்ளமான ரோட்டில் வந்து கொண்டிருந்ததாலும், விபத்து மேடான ரோட்டில் நடந்ததாலும், எனது பார்வைக்கு விபத்து நடந்தது தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, அரை அடி தான் மேடாக இருந்தது. சர்விஸ் ரோட்டிற்கும், மெயின் ரோட்டிற்கும் இடையே உள்ள சென்டர் மீடியனில் செடிகள் இருந்தது என்றால் சரியல்ல, புற்கள் தான் இருந்தது. எதிரியை தற்போது தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், போலிஸார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் வாகனத்தில் யார் பயணம் செய்தார்கள் என்றும், எப்படி விபத்து நடந்தது என்றும் குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியவில்லை என்றாலும் சரியல்ல. விபத்து சம்பந்தமாக போலிஸார் என்னை நேரடியாக தருமபுரி GH –ல் 31.10.2022 அன்று விசாரித்தார்கள். மருத்துவமனையில் விபத்தை நேரில் யார் பார்த்தீர்கள் என்று போலிஸார் கேட்டனர், அப்போது நான் சென்று கூறினேன். விபத்து நடந்த பிறகு அடிப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது நேரடியாக தெரியாது என்று கூறிவிட்டு, மருத்துவமனையில் சென்று பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, மறுநாள் நான் சென்று மருத்துவமனையில் பார்த்தேன். விபத்தை நேரில் பார்க்காமல், பார்த்ததாக விபத்தில் அடிப்பட்ட நபர்களுக்கு இழப்பீடு பெற வேண்டி பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளது போல் மணிகண்டன் ஹெல்மெட் அணிந்திருந்தால் தலையில் அடிப்பட்டிருக்காது என்றால் சரிதான். நான் பார்க்கும் போது விபத்து நடந்த இடத்தில் கருப்பு நிற ஹெல்மெட் இருந்தது, யார் அணிந்திருந்தார் என்று எனக்கு தெரியாது. விபத்தை நான் நேரில் பார்க்காததால் தான் விபத்தை பற்றி சரியான விவரத்தை கூற இயலவில்லை என்றால் சரியல்ல. காரை ஓட்டி வந்தவர் வேகமாக காரை ஓட்டவில்லை என்றாலும், இருசக்கர வாகனத்தில் வந்ததவர் தான் வாகனத்தை கவனிக்காமல் சாலையை கடந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தின் டயர் மார்க்ஸ் (Marks) சாலையில் இருந்தது. மேற்படி டயர் மார்க்ஸ் இருந்த விவரத்தை போலிஸார் விசாரணையிலேயே, முதல் விசாரணையிலேயே கூறவில்லை என்றால் சரிதான்.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.

**CC.No.53/2023 (JM.No.II, DHARMAPURI)**

**12.11.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW– 4 : திரு.குப்பன், த/பெ. ராஜப்பன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் சிவாடியில் உள்ள ஊத்துப்பள்ளத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. கடந்த 31.10.2022 அன்று காலை சுமார் 07.00 மணிக்கு நல்லம்பள்ளி பக்கம் வரும் போது காவல் துறையினர் விபத்து நடந்த இடமான செந்தில் பள்ளி அருகே சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். அந்த பார்வை மகஜரில் நானும், ராஜா என்பவரும் கையெழுத்திட்டோம். அந்த பார்வை மகஜர் **<u>அ.த.சா.ஆ.2</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. சம்பவம் நடந்த இடத்தில் நான் சென்ற போது எத்தனை போலிஸார் இருந்தனர் என்று குறிப்பிட்டு எனக்கு தெரியாது. மேற்படி நான் சம்பவயிடம் சென்ற போது போலிஸார் மற்றும் எங்களை தவிர வேறு யாரும் அங்கு இல்லை. நான் கைநாட்டு, எனது பெயர் மட்டும் எழுதுவேன், மற்றபடி படிக்க தெரியாது. நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய பூர்வீகம் தருமபுரி மாவட்டம் தான். தருமபுரி பேருந்துநிலையம் அருகே செந்தில் பள்ளி உள்ளது என்றால் சரிதான். மேற்படி செந்தில் பள்ளி ரொம்ப பிரபலமான பள்ளி என்றால் சரிதான். தருமபுரி பேருந்து நிலையத்திற்கும், விபத்து நடந்த இடத்திற்கும் இடையே சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். நான் சொன்னவாறு, சொன்ன தேதியில் எந்த இடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவயிடத்தில் எல்லா திசைகளிலும் என்னென்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சாட்சி முதலில் தெரியாது என்று கூறிவிட்டு, மீண்டும் தெரியும் என்று கூறுகிறார். சம்பவம் நடந்த இடத்திலிருந்து வடக்கு பக்கமாக மேம்பாலம் இருக்கிறது. வடகிழக்கு பக்கமாக என்ன உள்ளது என்றால் எனக்கு புரியவில்லை. தென்மேற்கு பக்கமாக என்ன உள்ளது என்றால் காலேஜ் உள்ளது. காலேஜ் பெயர் எனக்கு வாயில் வரவில்லை. நான் சொல்வது போல அந்த இடத்தில் காலேஜ் இல்லை என்றாலும், அவ்வாறு இருந்திருந்தால் போலிஸார் வரைபடத்தில் குறிப்பிட்டு இருப்பர் என்றால் சரியல்ல. நானும், விபத்தில் அடிப்பட்டவர்களும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

2. போலிஸார் சம்பவயிடத்தில் தட்டச்சு செய்தனரா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. நான் காலை 09.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றதாக போலிஸார் எழுதியிருந்தால், அது தவறு என்றால் சரிதான். நான் என்னுடைய செல்போன் நெம்பரை போலிஸாரிடம் சொல்லவில்லை. 31.10.2022 அன்று நான் சொல்வது போல காலை 07.00 மணிக்கு சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், போலிஸார் என்னை எந்த விசாரணையும் செய்யவில்லை என்றாலும், போலிஸார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையெழுத்திட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நானும், ராஜாவும் தனித்தனியாக

தான் வந்தோம். நானும், ராஜாவும் ஓரே ஊர்காரர்கள் தான் என்றால் சரிதான். அருகருகே குடியிருக்கிறோம் என்றால் சரிதான், அரை கி.மீ. தூரத்தில் இருக்கின்றோம். என்ன சம்பவத்திற்காக போலிஸார் அங்கு நின்று கொண்டிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, விபத்து நடந்தது சம்பந்தமாக அங்கு நின்றிருந்தனர்.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.

CC.No.53/2023 (JM.No.II, DHARMAPURI)

12.11.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW– 5 : திரு.ராஜா, த/பெ. மாணிக்கம்**

**முதல் விசாரணை**

நான் சிவாடியில் உள்ள ஊத்துப்பள்ளத்தில் குடியிருந்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. கடந்த 31.10.2022 அன்று காலை சுமார் 07.00 மணிக்கு சக்திவேல் பள்ளி அருகே சர்வீஸ் ரோட்டில் சென்று கொண்டிருந்த போது போலிஸார் என்னை நிறுத்தி, இந்த இடத்தில் விபத்து நடந்தது சம்பந்தமாக தெரியுமா என்று கேட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். அந்த பார்வை மகஜரில் நானும், குப்பன் என்பவரும் கையெழுத்திட்டோம். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் 7–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்த இடத்தில் சம்பவம் நடந்ததோ அந்த இடமான சர்வீஸ் ரோட்டில் வைத்து தான் என்னை போலிஸார் விசாரித்தனர் என்றால் சரிதான். சம்பவயிடமான சர்வீஸ் ரோட்டில் விபத்து நடந்ததற்கான இரத்த கறைகள், கிராச் முதலியவை இருந்தன. எந்த வாகனத்தால் இரத்தகறை ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சர்வீஸ் ரோட்டில் தான் விபத்து நடந்ததா என்றால் நான் மறுநாள் தான் சம்பவயிடம் சென்றேன். போலிஸார் அங்கு தான் நின்றிருந்தனர். மெயின் ரோட்டில் தான் விபத்து நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிஸார் சம்பவயிடத்தில் 4–5 நபர்கள் இருந்தனர். மேற்படி போலிஸார் காவல் ஆய்வாளரா, உதவி காவல் ஆய்வாளரா அல்லது காவலரா என்று தெரியாது என்றால் சரிதான். என்னுடைய முகவரியோ அல்லது தொலைபேசி எண்ணையோ நான் போலிஸாரிடம் தெரிவிக்கவில்லை. போலிஸார் காலை 09.00 மணிக்கு நான் அங்கு வந்ததாக குறிப்பிட்டு இருந்தால், அது தவறு என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு நான்கு திசைகளிலும் என்னென்ன இருந்தது என்று எனக்கு தெரியாது. நானும், விபத்தில் காயம்பட்டவர்களும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு சென்ற போது விசாரித்த பின்னர் போலிஸார் என்னை மீண்டும் விசாரிக்கவில்லை. போலிஸார் கையெழுத்து மட்டும் போடுமாறு கூறியதால் நான் கையொப்பமிட்டேன், மற்ற விவரம் எனக்கு தெரியாது.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.